# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness – PW12

| | | | |
|---|---|---|---|
| Name | : ஸ்ரீதர் | Caste | : |
| S/o. | : மணி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 08.01.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் தற்போது சங்ககிரி வட்டம், அரசிராமணி பிட்–1, கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 06.03.2022ம் தேதி அரசிராமணி பிட்–2 கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது காலை 11.15 மணிக்கு சங்ககிரி காவல் ஆய்வாளர் அவர்கள் தேவூர் காவல்நிலைய கொலை வழக்கு தொடர்பான குற்றவாளியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய சாட்சிகளாக இருக்குமாறு அழைத்ததன் பேரில் நானும் எனது கிராம

உதவியாளர் வேலுமணியும், ஒடசக்கரை பஸ்ஸ்டாப் சென்றோம். அன்று காலை 11.45 மணிக்கு ஆறுமுகம் மகன் காத்தவராயன் என்கிற போர்மன்னன் என்பவரை காவல் ஆய்வாளர் கைது செய்து 12.00 மணிக்கு விசாரித்தபோது அவர் சுடலை காளியம்மன் கோவில் பூசாரி ஆனந்தன் என்பவரை தொழில் மற்றும் முன்விரோதம் காரணமாக கொலை செய்துவிட்டதாக கூறி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எனக்கும் ஆனந்தனுக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக 05.03.2022ம் தேதி ஆனந்தனை கொலை செய்துவிட்டதாகவும் என்னை கூட்டிச்சென்றால் கொலைக்கு பயன்படுத்திய அருவாளையும் மஞ்சள் துண்டையும் செட்டிப்பட்டி நாடார் தெரு, வீரமாத்தியம்மன் கோவில் எதிரில் உள்ள சரபங்கா ஆற்றின் கரை ஓரத்தில் உள்ள முட்புதரில் மறைத்து வைத்துள்ளதை அடையாளம் காட்டி ஆஜர் படுத்துவதாக கூறினார். அந்த வாக்குமூலத்தில் நானும் எனது கிராம உதவியாளரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அதன்பேரில் பிற்பகல் 2.00 மணிக்கு செட்டிப்பட்டி நாடார் தெரு, வீரமாத்தியம்மன் கோவில் எதிரில் உள்ள சரபங்கா ஆற்றில் கரை ஓரத்தில் உள்ள முட்புதரில் ரத்தக்கறை படிந்த அருவாளையும், ரத்தக்கறை படிந்த மஞ்சள் துண்டையும் பிற்பகல் 2.00 முதல் 2.45 மணிக்கு காவல் ஆய்வாளரிடம் ஆஜர் செய்தார். அவற்றை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் அருவாள் மற்றும் மஞ்சள் துண்டுதான் எதிரி ஆஜர் படுத்திய சான்று பொருள்கள் ஆகும். அவை ஏற்கனவே சா.பொ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 ஆகும். மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சுடலை காளியம்மன் கோவில் பிட்–2 கிராமத்திற்கு சார்ந்தது என்றால் சரி. என்னை காவல் ஆய்வாளர் நேரில் கூப்பிட்டாரா என்றால் தொலைபேசியில் அழைத்தார். என்னை போலிசார் விசாரித்தபோது ஆய்வாளர் தொலைபேசியில் அழைத்தார் என்று கூறி உள்ளேனா என்றால் கூறி உள்ளேன். ஒடசக்கரை பேருந்து நிறுத்தம் ரோட்டிற்கு இரண்டு பக்கமும் பஸ்ஸ்டாப் உள்ளது, கொமாராபாளையம் செல்லும் பஸ்ஸ்டாப் கிழக்கு பக்கமும் எடப்பாடி செல்லும் பஸ்ஸ்டாப் மேற்குபக்கமாகவும் உள்ளது என்றால் சரி. நான் செல்லும்போது குற்றவாளியோடு காவல் ஆய்வாளர் இருந்தாரா என்றால் இருந்தார். குற்றவாளியை யார் அடையாளம் காண்பித்தார்கள் என்றும் யார் முன்னிலையில் கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் குற்றவாளியை என் முன்னிலையில் கைது செய்தார்கள். குற்றவாளியை காவல் ஆய்வாளர் அடையாளம் காண்பித்தார். குற்றவாளியை எந்த பேருந்து நிறுத்தத்தில் கைது செய்தார் என்றால் தற்போது ஞாபகமில்லை. அப்போது இரண்டு பஸ்ஸ்டாப்பிலும் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் வேறு யாரும் அங்கு இல்லை. ஒடசக்கரை பேருந்து நிறுத்தம் வாகனங்கள் மற்றும் மக்கள் போக்குவரத்து உள்ள பகுதி என்றால் சரி. மேற்படி விவரத்தை நான் போலிஸ் விசாரணையில் கூறி உள்ளேனா

என்றால் இல்லை. குற்றவாளி என்ன உடை அணிந்திருந்தார் என்றால் தற்போது ஞாபகமில்லை. குற்றவாளி அணிந்திருந்த உடையை எங்கு வாங்கி வந்தார் என்று கூறினாரா என்றால் ஞாபகமில்லை. சம்பவம் நடந்த அன்று இரவே போலிசார் எதிரியை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்துவிட்டார்கள் என்றும் ஊர் மக்கள் காவல்நிலையத்திற்கு வந்து எதிரியை பார்த்தார்கள் என்றும் மேற்படி விவரம் லோகல் சேனல் மற்றும நாளிதழ்களில் வெளி வந்தது என்றால் எனக்குத் தெரியாது. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் ஆய்வாளர் எதிரியை கைது செய்யவில்லை என்றும் எதிரி எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும் அதன் பேரில் எதிரி எந்த சான்றுபொருளையும் ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை யார் பதிவு செய்தார்கள் என்றால் ஆய்வாளர் சொல்ல சொல்ல உடனிருந்த காவலர் மடிக்கணினியில் பதிவு செய்தார். கைது நமூனா தயார் செய்து நான் அதில் கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. கைது நமூனா தயார் செய்திருந்தால் என்னிடம் கையெழுத்து பெற்றிருப்பார்கள் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் எதிரியை கைது செய்துவிட்டு, எதிரியை கைது செய்த இடத்திலும் சான்று பொருட்களை கைது செய்த இடத்திலும் நான் கையெழுத்து செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மடிக்கணினியில் பதிவு செய்ததை எங்கே சென்று பிரிண்ட் எடுத்தார்கள் என்றால் பக்கத்தில் இருந்த ஜெராக்ஸ் கடையில் பிரிண்ட் எடுத்தார்கள். கைது செய்த இடத்தில் கடைகள் மற்றும் வீடுகள் இருந்தது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.